தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

ஆணை நாள் 01.07.2026

முன்னிலை

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11580/B/2024**

திரு.M.பெருமாள் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
நகர திட்டமிடுநர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625002. — பொது அதிகார அமைப்பு

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01.06.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், மதுரை மாநகராட்சியில் Badminton Court அமைக்க 15cfc-Scheme-ல் மதிப்பீடு ஒப்புதல் உத்தரவு, அதன் கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள், டெண்டர் அறிவிப்பு (ம) ஒப்பந்ததாரர்கள் குறித்த தகவல்கள், ஒப்பந்த உத்தரவு உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 9 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 03.09.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.M.பெருமாள் அவர்கள் இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது). |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு.S.முரளி, நகர திட்டமிடுநர், மதுரை நகராட்சி, மதுரை மாவட்டம் அவர்கள் ஆஜரானார். |

**ஆணை**

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு கடித எண். ஈ4/008050/2024 நாள்.01.07.2024, கடித எண்.மதி/ஈ4/009257/2024 நாள்.26.11.2024 வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், 29.06.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பிய கடிதத்தின் வாயிலாக, மேல்முறையீட்டாளர் தன்னால் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை குறித்து தெரிவித்துள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர் அக்கடிதத்தில் தனக்கு பொதுத் தகவல் அலுவலரால் உரிய காலவரம்பிற்குள் நிறைவுடைய தகவல் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்து, இவ்வழக்கின் விசாரணையை மற்றொரு தேதிக்கு மாற்றம் செய்து தன்னை காணொலி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு வாய்ப்பளித்து உத்தரவிடும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இவற்றை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

3. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், கீழ்க்கண்டவாறு அணை பிறப்பிக்கப்படுகிறது:

1. **மேல்முறையீட்டாளருக்கு பொதுத் தகவல் அலுவலரால் உரிய காலத்திற்குள் போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் அறியமுடிகிறது.**
2. **எனவே, மேற்படி மேல்முறையீட்டாளர் கடிதம்வழி கேட்டுக்கொண்டதன்படி இவ்வழக்கின் விசாரணையை மற்றொரு தேதிக்கு மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்று இவ்வாணையம் கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 11580/B/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு:**

பொதுத் தகவல் அலுவலர் /
நகர திட்டமிடுநர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625002.

**<u>மேல்முறையீட்டாளர்:</u>**

திரு.M.பெருமாள்,
கதவு எண்.97, காளியம்மன் கோவில்
வடக்குத் தெரு, பழங்காநத்தம்,
மதுரை மாவட்டம் - 625003.

Copy to : File
AK/PC

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005